இலங்கையில் செய்திப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது. Q. B. 830

# வெற்றிமணி

சிறுவர் மாத இதழ்



தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

கௌரவ ஆசிரியர்:

மு. க. சுப்பிரமணியம்

15-7-68 30 சதம்.

நங்கையர் விரும்பும் நவநாகரீக
★ நகைகளுக்கும் வைரங்களுக்கும் ★
புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

# கே.என்.எம்.மீரன் சாஹிப்

''தங்கப்பவுண் நகை மாளிகை''

கன்னாதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்

*Visit*

## K. N. M. MEERAN SAHIB

JEWELLERS & DIAMOND MERCHANT

"SOVEREIGN PALACE"

**KANNATHIDDY** *Dial: 585* **JAFFNA**

## தமிழக நேயர்களுக்கு!

வெற்றிமணி மாதந்தோறும் தமிழகத்திற்கு அனுப்ப ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள நேயர்கள் வெற்றிமணிக்குரிய சந்தா, மாணவர் மன்றம், பேனா நண்பர் சங்கம் இவற்றிற்குரிய தொகைகளை

கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும்.

தமிழக விற்பனையாளர்களும், விளம்பரதாரர்களும் இவருடன் தொடர்பு கொள்ளவும்.

### கா. தமிழ்த்தம்பி

விஜயா பிரேம் ஒர்க்ஸ்,
பெரிய கடை வீதி - பழநி,
மதுரை மாவட்டம்.



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# வெற்றிமணி

## வருடச் சந்தா

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா. | 3-50 |
| இந்தியா | ரூபா. | 3-50 |
| மலாயா | $ | 3-50 |

தாற்செலவுட்பட

தனிப்பிரதி தபாலில் பெற விரும்பினல் 35 சத முத்திரையனுப்ப வேண்டும்.

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா. | 50-00 |
| உள் அட்டை | ரூபா. | 35-00 |
| முதற் பக்கம் | ரூபா. | 30-00 |
| உட் பக்கம் | ரூபா. | 20-00 |

தொடர்ந்து விளம்பரஞ் செய்யின் 15 வீதக் கழிவுண்டு

விபரங்களுக்கு எழுதுக.

## பொருள்டக்கம்


ஆசிரியர் தலையங்கம் ... ... 3
ஒரு வரம் தா ... ... ... ... 4
மூன்று பழங்கள் ... ... ... 7
நன்றியுடைமை ... ... ... ... 9
புவி - பொது விபரம் ... ... ... 10
கணக்கியலுக்கோர் அறிமுகம் ... 13
இளவேனில் இன்பம் ... ... 17
மாணவரும் விவசாயமும் ... ... 18
முயலின் தந்திரம் ... ... ... 20
எங்கே சமத்துவம் ... ... ... 21
மாணவர் மன்றம் ... ... ... 24
கவிதை அரங்கம் ... ... ... 25
பசுவும் கயிறும் ... ... ... ... 27
பேனு நண்பர் சங்கம் ... ... 29
நேயர் குரல் ... ... ... ... 30
ஈழத்துச் சிறுகதை நூல் ... ... 31

— வெற்றிமணி —
வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்
மலர் 6. | திங்கட்கிழமை 15-7-68 | இதழ் 3

# சோமசுந்தரப் புலவர்

ஈழநாடு பெற்றெடுத்த தனிப்பெரும் புலவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர். பதினையாயிரம் பாடல்களுக்கும் அதிகமாகப் பாடித் தமிழ்மொழியை வளப்படுத்தியவர். ஈழத் தமிழ் மக்களின் பண்பு, கலை, தனித்த இயல்புகள் அத்தனையும் அவரது பாடலில் கொலுவிருக்கின்றன. இத்துணைச் சிறந்த புலவரின் நினைவுநாளை இம்மாதம் ஏழாந் திகதி சிறப்புறக் கொண்டாடி யாழ் இலக்கிய வட்டம் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது. யாழ் இலக்கிய வட்ட எழுத்தாள அன்பர்களின் பணி ஈழத்து மக்களுக்கெல்லாம் ஓர் முன் மாதிரியாக அமைந்துள்ளது.

எமது புலவர்களை, எமது பெரியோர்களைப் போற்றும் பண்பை நாம் வளர்த்துக் கொள்ளல் வேண்டும். பிற நாடுகளில் எழுத்தாளர்களுக்கு உரிய இடம் கொடுத்து, அவர்களின் சொல்லை மதித்து, அவர்களின் ஆக்க பூர்வமான முயற்சிகளைப் போற்றி வருகின்றார்கள். சிங்கள சகோதரர்களும் இத்துறையில் நல்ல விழிப்புணர்ச்சி பெற்று முன்னேறி வருகின்றார்கள். தமிழ் மக்களுக்கு இம் மனப்பான்மை இன்னும் நன்கு விருத்தியடையவில்லை.

யாழ் இலக்கிய வட்டக் கூட்டத்தில் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்கள் சோமசுந்தரப் புலவரின் படைப்புகள் பிற மொழிகளில் பெயர்க்க வல்ல சிறப்புடையன என்று குறிப்பிட்டார்கள். பண்டிதை செல்வி அப்பாக்குட்டி தங்கம்மா அவர்கள் புலவரின் பாடல்களில் உள்ள உயிர்த் துடிப்பை உணர்ச்சியுடன் எடுத்து விளக்கினார்கள். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் பண்டிதர் சச்சிதானந்தன் அவர்கள் சோமசுந்தரப் புலவரைப் பிற புலவர்களோடு ஒப்பு நோக்கி அன்னாரின் மேன்மையையும் மொழி வழத்தையும் புலப்படுத்தினார்கள், இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள் புலவர் அவர்களின் அருமந்த பாடல்கள் சிலவற்றுக்கு அபிமான கருத்துக்கள் கூறிப் புலவரின் ஈடு இணையற்ற இக்காலத் தன்மையை விளக்கினார்கள்.

பெருவிருந்தன்ன மூன்று விரிவுரைகளைக் கேட்கக் கொடுத்து வைத்தோம் என்ற மன நிறைவையும் எங்கள் புலவரின் பெருமையைக் கேட்டதினால் ஏற்பட்ட ஓர் உள்ளக் குளிர்ச்சியையும் பெருமிதத்தையும் அளித்த யாழ் இலக்கிய வட்டத்திற்கு நாம் பெரிதும் கடப்பாடுடையோம்.

புலவர் அவர்களின் பாடல்களைத் தொகுத்து மலிவுப் பதிப்பாக வெளியிட வேண்டும் என்றும், புலவர் அவர்கள் பிறந்த நவாலியூரில் அன்னாருக்கு ஞாபகச் சின்னம் அமைக்கவேண்டும் என்றும் கூட்டத் தலைவி கூறிய ஆலோசனையை மக்கள் முன் வைக்கின்றோம்.

# ஒரு வரம் தா

இரசிகமணி கனக. செந்திநாதன்

அதோ, அந்தப் பெரிய மாளிகைக்கு முன்னுள்ள படலையிலே பஞ்சத்துக்கு ஆண்டி போல ஓர் உருவம் காணப்படுகிறதே அவர் யார்? ...தினந் தோறும் 'கதிர் காமவேலவனுக்கு அரோகரா, சந்நதி முருகனுக்கு அரோ கரா' போடும் பிச்சைக்காரனா? ...ஆலயங்களின் பெய ரைச் சொல்லித் தண்டும் தண்டல்காரனா? இல்லை. அவர் புலவர். பெரிய புலவர். 'சொல் என்ற மலரிலே பொரு ளென்ற புதுமதுச் சொட்டப்' பாடும் புலவர்.

அவருக்கு அந்த மாளிகையிலே என்ன வேலை? தன் னுடைய வறுமையைச் சொல்லி, தன்னுடைய புலமை யைக் காட்டி, புலமைக்குத் தக்க சன்மானம் பெற்றுச் செல்ல வந்திருக்கிறார். வாசற் படலையடியில் அவர் மனத் திலே ஒரு போராட்டம் நடக்கிறது. அவரது தன்மானம் உள்ளே போகவேண்டாம் என்று தடுக்கிறது. வறுமையோ 'போ, போ' என்று பிடர் பிடித்துத் தள்ளுகிறது. இந்தப் போராட்டத்திலே வறுமைதான் வென்றுவிடுகிறது. முன் னொருபோதும் திறந்தறியாத படலையை அரைகுறை மன தோடு திறந்து அம் மாளிகைக்குள்ளே அவர் பிரவேசிக் கிறார். அவர் தம் மனோ நிலையை அப்படியே படம் பிடித்து நமக்குக் காட்டுகிறார்.

''இல்லாமையால் வந்த துயரினால் மிகநொந்து
இரக்கத் துணிந்து மானம்
ஏகாது பின் தள்ள ஆற்றாமை முன்தள்ள
இடை யூச லாடி'' என்பது அவர் பாடல்.

அம் மாளிகையினுள்ளே ஒரு பிரபு திண்டு தலையணை மேல் எடுபிடி ஆட்கள் புடைசூழ வீற்றிருக்கிறார். அவர் புலவர் பெருமானைக் கண்டதும் ஓடி ஒளிக்கவில்லை; கத வைச் சாத்தவில்லை; எடுபிடி ஆட்களைவிட்டுத் துரத்தவும் இல்லை. புலவர் எதிர்பார்த்ததிற்கு மாறாக அவரைக் கண்ட வுடனே தம் இருக்கையை விட்டெழுந்து இரு கரங் கூப்பி வரவேற்றார். அது மாத்திரமா! ''புலவர் பிரானே கடவுள் சத்தியமாகச் சற்று நேரத்துக்கு முன்னும் தங்களைப் பற்

றியே பேசிக் கொண்டிருந்தோம்" என்றும் திருவாய் மலர்ந்தார்.

இதைக் கேட்டதும் புலவர் பிரானுக்கு உச்சி குளிர்ந்தது. இவரல்லவோ பிரபு. இவராலல்லவோ மாதம் மும் மாரி பொழிகிறது. இப்படிப்பட்ட பிரபுவைக் காணுமல் இவ்வளவு காலமும் இருந்தோமே. இவரைப் பற்றிப் பிறர் சொல்வதைக் கேட்டுக் கேவலமாய் எண்ணினேமே என்றெல்லாம் நினைந்தார்.

அவர் முகத்தில் சந்தோஷத்தின் அறிகுறிகள் தென்பட்டன. பிரபு புலவர் பிரானைக் கரம் குவித்து வணங்கி இருக்கை தந்து தெண்டனிட்டு, "அடியேனை நோக்கி வந்த காரியம் யாது?" என்று வினவினுர். பிரபுவின் உபசாரங்களையெல்லாம் பார்த்த புலவர் பெருந் தொகையாகக் கேட்க விரும்பினுர். ஆனுலும் அவர் பண்பாடு விடவில்லை. மெள்ளமாகப் பௌவியமாகச் "சிறிது பொருள் உதவி செய்யவேண்டும்" என்று வாய்விட்டுக் கூறினுர்.

அப்போதுதான் பிரபுவின் சுயரூபம் தெரிந்தது. அவரது திருமுகம் கருமுகமாய் விட்டது. பேசிய வாய் அடைத்துவிட்டது. கழுத்துச் சரிந்து விழிகள் சொருகி விட்டன. நாக்கு விழுந்து விக்கல் எழுந்துவிட்டது. கிட்டத்தட்ட மரணவேதனையடையும் நிலைக்கு அவர் வந்து விட்டார்.

புலவர் திகைத்துப்போனுர். "என்னுலே நீ ஏனப்பா சாகிறுய்? இன்னும் சிலகாலம் உண்டு கொழுத்து உறங்கும்; நான் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுத் திரும்பினுர்.

அந்த நிகழ்ச்சி அவர் மனதைவிட்டு நீங்கவில்லை. வீடு வந்ததும் முன்போல உறுத்திக் கொண்டேயிருந்தது. அன்று இரவு கலைமகளை வணங்கும்போதும் அந்த நிகழ்ச்சியே மனத்திரையில் தோன்றியது. "அம்மா, தாயே நான் உன்னைப் பல வரங்கள் கேட்கவில்லை. ஒரே ஒரு வரம் தா. ஈயாத லோபிகள் வீட்டிலே சென்று இரக்

காத வரத்தைத் தா; அதுவே போதும்'' என்று வேண்டினர். அந்த வேண்டுதல் அருமையான கவிதையாய் வழுவி வீழ்ந்தது.

''கண்டெழுந் திருகரங் கூப்பித் தலைக்கு மேற்
காட்டி யஞ்சல் செய்குவார்
கடவுளே யிப்போது பேசியது முங்களது
கதையென்று கண்ணீர் விடுவார்
தெண்டனிடுவார் இங்கு வந்த காரியமேது
தெரிவிக்க வேண்டு மென்பார்
சிறிது பொருள் உதவியென் றடியெடுத்திடுமுனம்
திருமுகம் கருமுக மதாய்
விண்டவாய் கூம்பக் கழுத்துச் சரிந்தொரிரு
விழி சொருகி நாக்கு வீழ்ந்து
விக்குளெழ மரண வேதனையுறும் வஞ்சையர்கள்
வீட்டிலே பொருளி ரக்கச்
சென்றிடா வரமும் உன்திருவடிச் சேவையுஞ்
சிறியனுக் கருளு கண்டாய்
தென் பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே.''

இந்த அநுபவப் பாடலைப் பாடியவர் யார் தெரியுமா; ஆடிப்பிறப்பொடு கத்தரித் தோட்டமும் ஆக்கியளித்த புலவர் பிரானாகிய தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவர் அவர்களே!

* * *

*Visit:*

FOR TAILORING

★ SUITS ★ TROUSERS ★ SHIRTS
★ WEDDING SUITS & ★ LADIES GARMENTS

**DEEN TAILORING MART.**

*(Prop :* **M. ISSADEEN)**
C. 27, Grand Bazaar,
**JAFFNA.**

# மூன்று பழங்கள்

— முல்லைத்துறைவன் —

உலகத்தில் எத்தனையோ பழங்கள் இருக்கின்றன. ஆயினும், மா, பலா, வாழைப் பழங்களுக்குத் தமிழரிடையே தனிமதிப்புண்டு. அதனால், முக்கனிகள் என அவை தொகுக்கப்பட்டு மதிக்கப்பட்டு வருகின்றன.

நாவுக்கும் உடலுக்கும் நலந்தரும் இத்தகைய கனிகள் மட்டுமா! உடலையும் உள்ளத்தையும் உறுத்தும் பழங்களும் இங்கு இருக்கின்றன. கவி சிரேஷ்டர்களினதும் புலவர் பெருமக்களினதும் வாக்கிலே புகுந்து இலக்கியங்களிலும் அவை இடம் பெற்றுள்ளன. அத்தகைய இலக்கியப் பழங்களிலே மூன்றைச் சற்றே சுவைத்துப் பார்ப்போமா?

பிரப்பம் பழம்:

மாணவர்கள் 'தலைதெறிக்க' ஓடுகிறார்கள். கட்டிய குடுமி குலையக் குலைய, உடுத்த வேட்டி அவிழ அவிழ ஓடுகிறார்கள். காரணம்? நெடுவல் உபாத்தியாரின் 'தலைக் கறுப்பு' அவர் தூரத்திலே வரும்போதே தெரிந்து விடுகிறது. பள்ளிக்குக் கள்ளம்பண்ணின மாணவர்கள் அவர்கள். 'சட்டம்பி... சற்றும் இரங்கான், என்பது அவர்களுக்குப் பழம் பாடம். எனவே ஓடுகிறார்கள்.

உபாத்தியாயரா விடுகிறவர்? அகப்பட்டுக் கொண்டனர் மாணவர்கள். பரிசாகக் கிடைத்தது 'பழம்'. 'பிரப்பம்பழம்'. 'நற் பிரப்பம்பழம்' என நயமொழுகக் கூறுகிறார், அண்மையில் நம்மை விட்டுப் பிரிந்த 'யாழ்ப் பாணன்'.

''குடுமி குலைந்து விழக் குறுவேட்டி அவிழ்ந்து விட
நெடுமி உபாத்தியவன் நெடுந்தூரம் தொடர்ந்து வர
நடுவழியிற் பிணக்குற்று நற்பிரப்பம் பழம் வாங்கி
வடுதிருந்தி வாழ்ந்த வாழ்வுமினி வாராதோ''

[குறுவேட்டி - சிறுவேட்டி; நெடுமி - நெடுவல்; பிணக்கு - மாறுபாடு; வடு - குழப்படி.]

இலவம்பழம்:

'இலவு காத்த கிளி' என்பது பழமொழி. அதன் கதையை இனிமை தவழும் ஓசையிலே கவிதை செய்தவர் 'தங்கத் தாத்தா' சோமசுந்தரப் புலவர்.

''துஞ்சாது விழித்திருந்தே அதிகாலை எழுந்து
சொல்லி வைத்தோரையும் கூட்டி வரும்போது
பஞ்சாகிக் காற்றுடனே பறந்ததுவே வெடித்துப்
பைங்கிளியார் போற்றிவந்த முள் இலவம்பழமே''

'இலவமரம் அரும்பு கட்டக் கண்டே, (அது) அலராகிப் பிஞ்சாகிக் காயாகிக் கனியும்' காலம் வரை காத்து இனசனத்தையும 'பழ விருந்து' என அழைத்து வந்த போது அந்த 'இலவம்பழம்' பஞ்சாகப் பறந்தால், பைங்கிளியாருக்கு எப்படி இருக்கும்?

நெருஞ்சிப்பழம்:

இறுதியாக நெருஞ்சிப் பழத்தை நெருங்குவோம். நெருங்கலாமா? சற்றே சிந்தித்துத்தான் செய்ய வேண்டும். ஏன்? முதலில் கிடைத்த பிரப்பம் பழம், கையையும் காலையும் பதம் பார்த்துவிட்டது! இடையிலே பழுத்த இலவம் பழமோ கைக்குமெட்டாது வாய்க்குங் கிட்டாது காற்றுடனே பறந்துவிட்டது!! இந்த நெருஞ்சிப்பழம் எப்படிப்பட்டதோ?

''அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்'' (திருவள்ளுவர் 1120)

அன்னப் பறவையின் அடிவயிற்றிறகும், மோந்தாலே வாடிவிடும் அனிச்சப்பூவும் மென்மையின் சின்னங்கள். அவைதாமும், பெண்ணின் பாதத்துக்கு நெருஞ்சிப் பழம் போல் வருத்தம் செய்யுமாம்!

இந்த மூன்று பழங்களும், கையையும் காலையும் பதம் பார்க்கினும் பார்க்குக; காற்றோடு பஞ்சாய்ப் பறக்கினும் பறக்குக; காலடியை உறுத்துவதற்கேற்ற உவமையாயினும் ஆகுக. எனினும், இலக்கிய முக்கனிகளாகிய இவற்றைத் தமிழ் நெஞ்சங்கள் என்றும் விரும்பிச் சுவைத்துக்கொண்டேயிருக்கும்.

# நன்றியுடைமை

## கமலாவின் தீபாவளிப் பரிசு (33)

மு. க. சுப்பிரமணியம்

கமலா ஆறும் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் ஒரு சிறுமி. இவளுக்கு விமலா என்று ஒரு மாமியிருந்தாள். விமலாவுக்கு கமலாவில் அதிகபற்று, சென்ற தீபாவளிக்கு கமலாவுக்கு அழகிய பாவாடையும் சட்டையும் வாங்கி பார்சலில் அனுப்பி வைத்தாள். கமலா அளவற்ற சந்தோஷமடைந்தாள். தன் பள்ளித் தோழிகளுக்கு தன் மாமியைப்பற்றிப் புகழ்ந்து கூறினுள். தன் வீட்டுக்கு வரும் தனது சுற்றத்தவர்களுக்கும் விமலா தன்னிடம் வைததிருக்கும் அன்பைப் பற்றியும் தனக்கு அனுப்பிய தீபாவளிப் பரிசைப் பற்றியும் கூறத் தவறவில்லை. ஆனுல் தனக்குப் பரிசு அனுப்பிய மாமிக்கு நன்றி தெரிவித்து ஒரு கடிதம் எழுத கமலா எண்ணவில்லை. இது நன்றியுடைமை ஆகாது. எமக்கு யாராவது ஒன்றைத் தந்தால் உடனே தந்தவரைப்பற்றி நினைக்க வேண்டும். அத்துடன் எங்கள் நன்றியை உடனே தந்தவருக்குத் தாமதமின்றித் தெரிவிக்க வேண்டும். இதற்காகத்தான் யாம் உண்பதற்கு முன்பும் பின்பும் தேவனுக்கு ஸ்துதி கூறுகின்ருேம். எங்களுக்கெல்லாம் மேலாக இருக்கும் அன்பு, இரக்கம் நிறைந்த கடவுள் எமக்கு அருமையான உணவு கிடைக்கச் செய்தமைக்காக அவருக்கு நன்றி தெரிவிக்கிருேம்.

சில நாட்கள் சென்றுவிட்டன. விமலாவுக்குக் கடிதமேதும் கமலாவிடமிருந்து கிடைக்கவில்லை. ஒரு நாள் கமலாவுக்கு ஒரு கடிதம் கிடைத்தது. ''யான் அனுப்பிய கடிதமும் பரிசும் கிடைத்தனவா?'' என விமலா எழுதியிருந்தாள். கமலா உடனே கடிதமும் பரிசும் கிடைத்தனவென்றும் பரிசு அனுப்பியதற்காகத் தன் நன்றி எனவும் எழுதினுள். ஆனுல் கமலா தான் முன்பே நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதவில்லை என்று மிகவும் வெட்கமடைந்தாள். ஒருவர் தான் செய்தவற்றிற்கும் மற்றவரிடம் நன்றியைத் தெரிவிக்கும்படி கேட்பது நன்றல்ல - கேட்காமலே யாம் நன்றியைத் தாமதமின்றி அறிவிக்க வேண்டும்.

அன்புள்ள செயல்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை மறக்கக் கூடாது. நன்றியைத் தெரிவிக்க மறக்கவும் கூடாது.

தொடர்ச்சி:

# புவி — பொது விபரம்

— மணிலா —

## அசைவுகள்

புவியின் அசைவுகள் இரண்டு வகைப்படும். அவை: 1. நாளியக்கம் 2. ஆண்டியக்கம்.

**நாளியக்கம்:**

புவியச்சை மத்தியாகக் கொண்டு புவியானது மேற்கிலிருந்து கிழக்காக 24 மணித்தியாலத்திற்கொரு முறை தன்னைத் தானே சுற்றுகிறுது. இது நாளியக்கம் எனப்படும். இந் நாளியக்கம் காரணமாக இரவு பகல் என்பன தோன்றுகின்றன.

**ஆண்டியக்கம்:**

புவி தன்னைத்தானே சுற்றுவதுடன் சூரியனையும் சுற்றி வருகின்றது. புவி சூரியனை ஒரு முறை சுற்றி வர 365¼ நாட்கள் செல்கின்றது. புவி சூரியனைச் சுற்றும் பாதை வட்டமாக அமையாது நீள்வட்டமாக அமைகின்றது. இப் பாதை எப்போதும் ஒரேயளவாயிருப்பதுடன் புவி இப் பாதையிலிருந்து சிறிதும் விலகுவதில்லை. இப் பாதை ஒழுக்கு எனப்படும். புவியச்சும் சாய்வான நிலையிலே இருக்கின்றது. அதில் மாற்றம் ஏற்படுவதில்லை. ஆண்டியக்கம் காரணமாகவே பருவ காலங்கள் ஏற்படுகின்றன.

**பருவங்கள்:**

புவி சூரியனைச் சுற்றி வருவதாலும் புவியச்சு சாய்ந்தமைந்திருப்பதாலும் பருவங்கள் ஏற்படுகின்றன. ஒரு ஆண்டில் நாலு பருவங்கள் உள. அவை: வசந்தம் கோடை, இலையுதிர், மாரி.

இடைவெப்ப வலயங்களில் இந் நான்கு பருவங்களையும் வெளிப்படையாகக் காணக் கூடியதாக இருந்தபோதும் வெப்ப வலயத்தில் கோடையும் மாரியுமே நன்கு புலப்படும்.

புவி - சூரியன் தொடர்பு:

சூரியன் மத்திய கோட்டிலிருந்து வடக்காகவும் தெற்காகவும் நகர்கின்றது. வடக்காக கடகக்கோடு வரையும் தெற்காக மகரக்கோடு வரையும் நகரும் சூரியன் இவ்விரு இடங்களிலிருந்தும் திரும்பி மத்திய கோட்டை நோக்கி வருகின்றது. ஆனி 21-ந் திகதி கடகக் கோட்டில் நின்ற சூரியன் மத்திய கோட்டை நோக்கி நகர்ந்து புரட்டாதி 23ல் மத்திய கோட்டை அடையும். அங்கிருந்து தொடர்ந்து தெற்காகப் பயணம் செய்து மார்கழி 21ல் மகரக் கோட்டை வந்தடையும். பின்னர் அங்கிருந்து மத்திய கோட்டை நோக்கி வடக்காக நகர்ந்து பங்குனி 21ல் மத்திய கோட்டை அடையும். இத் தேதிகளில் நாம் சில குறிப்பிடக் கூடிய நிலைமைகளை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஆனி 21-ந் திகதி:

இத் திகதியில் சூரியன் கடகக் கோட்டில் நிற்கின்றது. சூரியனின் கதிர்கள் $23\frac{1}{2}°$ கடகக் கோட்டில் செங்கோணமாக விழுவதால் நண்பகலில் சூரியன் தலைக்கு நேர் மேலே இருக்கும். இதனால் தெற்கிலும் பார்க்க இங்கு சூரியன் அதி உயரத்தில் காணப்படும். மேலும் வட கோளார்த்தத்தில் உள்ள அகலக் கோடுகளில் அரைப் பங்கிற்கு மேல் சூரிய ஒளி பெறும். இவ்வளவு மத்திய கோட்டிலிருந்து செல்லச் செல்லக் கூடிச் சென்று வட முனைவில் 6 மாத காலம் பகலாயிருக்கும். அத்துடன் நீண்ட பகற்பொழுது இருக்கின்றமையால் வெப்பம் அதிகமாகும். இதனால் இக் காலம் வடக்கில் கோடையாயும் தெற்கில் மாரியாயுமிருக்கும். மேலும் மத்திய கோட்டில் இரவும் பகலும் சமமாக இருக்கும்.

மார்கழி 21-ந் திகதி:

இத் திகதியில் சூரியன் மகரக் கோட்டில் நிற்கின்றது. சூரிய கதிர்கள் $23\frac{1}{2}°$ மகரக் கோட்டில் செங்கோணமாக விழுவதுடன் தெற்கில் சூரியன் மிக உயரத்திலும் தெரியும். தென் கோளார்த்த அகலக் கோடுகளில் அரைப் பங்கிற்கு மேல் ஒளி பெறும். எனவே தென்னரைக்

கோளம் முழுவதும் பகலாயும் வடவரைக் கோளம் இர வில் மூழ்கியும் இருக்கும். மேலும் தென்னரைக் கோளத் தில் இக் காலம் கோடையாயும் வடவரைக் கோளத்தில் மாரியாயுமிருக்கும். மத்திய கோட்டில் இரவும் பகலும் சமமாயிருக்கும்.

பங்குனி 21, புரட்டாதி 23-ந் திகதிகள்:

இவ் விரு திகதிகளிலும் சூரியன் மத்திய கோட்டின் மேல் வெப்பம் கொடுக்கின்றது. இக் காலங்களில் மத்திய கோட்டில் மட்டுமே சூரிய கதிர்கள் செங்கோணமாக விழு வதுடன் மத்திய கோட்டில் மட்டுமன்றி எல்லா அகலக் கோடுகளிலும் சமமான இரவும் பகலும் இருக்கும். மேலும் சூரியன் நேர் கிழக்கில் தோன்றி நேர்மேற்கில் மறையும்.

வலயங்கள்:

பொதுவாகப் புவியில் நாம் மூன்று வலயங்களைக் காணலாம். அவை:

i வெப்ப வலயம் $0^\circ$ — $23\frac{1}{2}^\circ$

ii இடைவெப்ப வலயம் $23\frac{1}{2}^\circ$ — $66\frac{1}{2}^\circ$

iii குளிர் வலயம் $66\frac{1}{2}^\circ$ — $90^\circ$

புவியின் மத்திய கோட்டிற்கு வடக்கில் சில காலங் களிலும் தெற்கில் சில காலங்களிலும் சூரியன் வெப்பம் கொடுக்கின்றது. இவ்வாறு சூரியன் நிற்கும் எல்லை $23\frac{1}{2}^\circ$ வட தென் அகலக் கோடுகளாகும். ஆகவே மத்திய கோட்டிலிருந்து இவ் வெல்லை வரையும் உள்ள பாகம் வெப்ப வலயமாகும். இதற்கப்பால் $66\frac{1}{2}^\circ$ வரையும் கால நிலை சீராயிருக்கின்ற காரணத்தால் இப்பாகம் இடை வெப்ப வலயம் எனப்படுகின்றது. $66\frac{1}{2}^\circ$ தொடக்கம் $90^\circ$ வரையுள்ள பாகத்தில் அதிக குளிர் காரணமாக இது குளிர்வலயம் என அழைக்கப்படுகிறது.

— வளரும்

★

தொடர்ச்சி:-

# கணக்கியலுக்கோர் அறிமுகம் 4

வை. சி. சிவஞானம்

காசோலைகளைப் பெறுதல்:-

காசோலைகளை வணிகர்கள் காசைப் போலவே மதிக்கின்றனர் பெறும் காசோலைகளை உடனே காசு நிரலில் பற்றுப் பாகத்தில் பதிந்து பின் வங்கிக்கு அனுப்பும் போது வங்கி நிரலில் பற்றும் காசு நிரலில் வரவும் வைப்பர், ஆனல் பெறும் காசோலைகளை உடனுக்குடன் வங்கிக்கு அனுப்பினுல் வங்கி நிரலில் பற்று எழுதி பெற்ற காசோலையின் விபரங்களை ஒரு குறிப்புப் புத்தகத்தில் பதிந்து வைப்பர்.

வங்கியால் மறுக்கப்படும் காசோலைகள்:-

நாம் பெற்ற காசோலைகளை வங்கிக்கு அனுப்பும் போது வங்கிக் கணக்கில் பற்று எழுதுகின்றோம். காசோலை தந்தவர்களின் கணக்கில் போதிய பணம் இல்லாவிடின் அல்லது வேறு தவறுதல் கள் காரணமாக வங்கி பணத்தை அறவிடாது சில காசோலைகளை எமக்குத் திருப்பி அனுப்பிவிடலாம். அவ்வித காசோலைகள் மறுத்த காசோலைகள் எனக் கூறப்படும். மறுத்த காசோலைகளை வங்கிநிர லில் வரவுப் பாகத்தில்பதிதல் வேண்டும்,

எதிர்ப்பதிவுகள்:-

சில நடவடிக்கைகளை காசேட்டு நிரலிலும் வங்கி நிரலிலும் பதியவேண்டி இருக்கும்.

வங்கிக்கு அனுப்பிய காசு 500

வங்கியில் பணம் போடுவதால் வங்கி நிரலில் பற்றிலும், காசு வங்கிக்கு கொடுக்கப்படுவதால் காசு நிரலில் வரவிலும் பதி தல் வேண்டும்.

வங்கியில் எடுத்த பணம் 1000. காசைப் பெறுவதால் காசு நிரலில் பற்றும் வங்கியில் பணம் இருப்பதால் வங்கி நிரலில் வர விலும் பதிதல் வேண்டும்.

உதாரணம்:

நடவடிக்கைகள்:

தை 1. காசேடு 1500
,, வங்கி மேலதிகப் பற்று 500
,, 2. வங்கிக்கனுப்பிய காசு 1000
,, 8. நாதன் தந்த காசு 800
,, 10. பாலன் தந்த காசோலை வங்கிக்கு அனுப்பப்பட்டது 905

,, 12, வங்கி திரட்டிய எனது முதலீடுகளின் வட்டி 250
,, 14: வங்கி எனக்காகச் செலுத்திய வாடகை 100
,, 20. வங்கியில் எடுத்த காசு 150
,, 30. வங்கிச் செலவுக் கட்டணங்கள் 25

## இரு நிரல் காசேடு

| மீ | உ | விபரம் | காசு | வங்கி | மீ | உ | விபரம் | காசு | வங்கி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தை | 1 | மீதி | 1500 | | தை | 1 | மேலதிகப் பற்று | | 500 |
| ,, | 2 | காசால் | | 1000 | ,, | 2 | வங்கிக்கு | 1000 | |
| ,, | 8 | நாதனுல் | 800 | | ,, | 14 | வாடகைக்கு | | 100 |
| ,, | 10 | பாலன் காசோலை | | 950 | ,, | 20 | காசால் | | 150 |
| ,, | 12 | முதலீடு வட்டி | | 250 | ,, | 30 | வங்கிச் செலவு | | 25 |
| ,, | 20 | வங்கியால் | 250 | | | | மீதி | 1450 | 1425 |
| | | | 2450 | 2200 | | | | 2450 | 2200 |
| மாசி | 1 | மீதி | 1450 | 1425 | | | | | |

மூன்று நிரல் காசேடு:-

கடன் பட்டோரிடம் இருந்து விரைவில் பணத்தை அறவிடு வதற்காக வியாபாரிகள் குறித்த தவணைக்குள் பணத்தைச் செலுத்துவோருக்கு ஒரு வீதக் காசு கழிவு கொடுப்பர். இதைக் கொடுத்த கழிவு என்பர். கடன் கொடுத்தோருக்கு குறித்த தவணைக்குள் பணத்தைக் கொடுத்தால் அவர்களும் ஒரு வீதக் காசு கழிவு தருவர். இக் கழிவைப் பெற்றகழிவு என்பர்.

கழிவுக் கணக்கை எழுதும் விதி:-

கொடுத்த கழிவைப் பற்றிலும் பெற்ற கழிவை வரவிலும் பதிதல் வேண்டும்.

கழிவு, காசு, வங்கி ஆகிய மூன்று கணக்குகளையும் ஒரே கணக்கில் மூன்று நிரல்களில் பதிவதையே மூன்று நிரல் காசேடு என்பர்.

உதாரணம்:

தை 1. காசு மீதி 1500
வங்கி மீதி 2000
,, 6. ஆனந்தன் தந்த காசு 780
கொடுத்த கழிவு 20
,, 10. நாதனுக்குக் கொடுத்த காசோலை 775
தந்த கழிவு 25
,, 14. கோபால் தந்த காசோலை வங்கிக்கு அனுப்பப்பட்டது 950
கொடுத்த கழிவு 50
,, 18. இராமநாதனுக்குக் கொடுத்த காசோலை 1240
தந்த கழிவு 60
,, 24. பாலன் தந்த காசு 825
கொடுத்த கழிவு 25

பல நிரல் காசேடு:-

ஒரு வியாபார நிலையத்துக்குப் பல வகையில் நாள்தோறும் வருமானங்கள் வரினும் அவ் வகைகளுக்கு நாள்தோறும் செலவு அல்லது பணம் வெளியே கொடுக்க வேண்டியிருப்பினும் இக் காசேட்டைப் பாவிக்கலாம்.

பற்றுப் பாகத்தில் பல நிரல்களிட்டு, ஒவ்வொரு வகை வருமானங்களை அந்நிரல்களில் பதிந்து இறுதியில் உள்ள மொத்த நிரலில் முழுக் கூட்டுத் தொகையையும் பதிதல் வேண்டும். இதே போன்று செலவினங்களும் பல நிரல்களிடப்பட்டு ஒவ்வொரு இனச் செலவும் ஒவ்வொரு நிரலிலும் தனித்தனி பதிந்து இறுதியில் மொத்தச் செலவு நிரலிலும் பதியப்படும். இக் காசேடு பகுதிக் கடைகள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற நிலையங்களுக்கு மிகவும் உபயோகமானது.


காசேட்டின் பயன்கள்:-

1. குறித்த திகதியில் காசு மீதி, வங்கி மீதி, பெற்ற கழிவு, கொடுத்த கழிவு என்பவற்றை அறிய உதவுகின்றது.
2. செலவின் விபரங்களையும் தொகைகளையும் அறிய உதவுகின்றது.
3. பணம் தந்தவர்களின் விபரங்களையும் கொடுத்தவர்களின் விபரங்களையும் தொகைகளையும் அறிய உதவுகின்றது.
4. பெயரேட்டின் ஒரு பகுதி வேலையைத் தானே ஏற்றுக்கொள்ளுகின்றது.
5. முக்கியமான முதலேடு அல்லது துணையேடாக விளங்குகின்றது.

## காசேடு

| பற்று | | | | | | வரவு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மீ | உ | விபரம் | கழிவு | காசு | வங்கி | மீ | உ | விபரம் | கழிவு | காசு | வங்கி |
| தை | 1 | மீதி | | 1500 | 2000 | தை | 10 | நாதனுக்கு | 25 | | 775 |
| ,, | 6 | ஆனந்தன் | 20 | 780 | | ,, | 18 | இராமனுக்கு | 60 | | 1240 |
| ,, | 14 | கோபால் | 50 | | 950 | | | மீதி | | 3105 | 935 |
| ,, | 24 | பாலன் | 25 | 825 | | | | | | | |
| | | | 95 | 3105 | 2950 | | | | 85 | 3105 | 2950 |
| மாசி | 1 | மீதி | | 3105 | 935 | | | | | | |

(தொடரும்)




# இளவேனில் இன்பம்

சி. டட்லிகுமாரி
அ. த. க. பாடசாலை, கிளிவெட்டி.

தமிழ் மக்களிடத்திலே கூனியாகிய பங்குனி மாதம் கழிந்தால் எங்கும் மங்கல ஒலி. 'கூனி குடி போகாதே; ஆனி அடி கோலாதே' என்பது பழமொழி. இப்படிக் கூனியும் ஆனியும் கூடாவென்று கருதும் தமிழர் சித்திரையைச் சிறந்த ஆர்வத்தோடு வரவேற்கின்றார்கள். தமிழ் ஆண்டுப் பிறப்பை அதன் தலை நாளில் அமைத்துக் கொண்டாடுகிறார்கள். அதன் காரணம் என்ன?

சித்திரை மாதத்தில் இளவேனிற் காலம் தொடங்குகின்றது. வசந்தம் என்னும் இளவேனில் இன்ப சுகம் தரும் காலம். அப்போது பசுமையான செழுஞ்சோலை பார்க்குமிடமெல்லாம் கண்ணுக்கு விருந்தளிக்கும். மாஞ்சோலை மெல்லிய தளிராடை புனைந்து இலங்கும். வேம்பின் கொம்பிலே பூத்த சிறு வெண்மலர்கள் புதுமணம் கமழும். தென்னை மரங்கள் இனிமையான இள நீரைத் தரும். பனை மரங்கள் சுவையான பத நீரைக் கொடுக்கும்.

வசந்த காலம் பிறந்ததென்று மகிழ்ந்து பசுங் கிளிகள் மழலை மொழி பேசி மரக் கிளைகளிலே கொஞ்சிக் குலாவும். கருங் குயில்கள் மறைந்து நின்று கூவும். மன்னன் மாரன் மகிழ்துணையாகிய இன்இளவேனில் வந்தனள் என்று குயில் கூவுவதாக இளங்கோவடிகள் பாடுகின்றார். எனவே இளவேனிற் காலம் மன்மதன் மகிழ்ந்து ஆட்சி செய்யும் காலம்.

புதுமணம் புரிய விரும்புவோர் சித்திரையின் வரவை மிக்க ஆசையுடன் நோக்குவர். திருமணத்திற்குரிய சூழ்

நிலே அப்போது இயல்பாக அமைந்திருக்கும். பகலவன் ஒளி தருவான். வீடு தோறும் நெல்லும் மணியும் பிறவும் நிறைந்திருக்கும். தென்றல் என்னும் இளங்காற்று வீசிக் கொண்டிருக்கும். இனிய திருமணம் இன்பகரமாக நடைபெறும். இத்தகைய இன்பம் நிறைந்த இளவேனிலின் சுகத்தை ஈசனுடைய பேரின்பத்து நிகராகப் பாடுகின்ருர் வடலூரடிகளார். இளங் கோடையில் இளைப்பாறிக் கொள்ளுதற்கேற்ற செழுஞ் சோலேயாகவும் ஓடையிலே ஊறுகின்ற தீன் சுவைத் தெள்ளீராகவும் மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்ருகவும் ஈசனது இனிய கருணையைக் கண்டு போற்றுகிருர் அக் கவிஞர்.

எனவே இயற்கை அன்னே இனிய கோலத்தில் இலங்கும் காலம் இளவேனிற் காலம். மாந்தர் ஐம்பொறிகளாலும் நுகர்தற்குரிய இன்பம் பொங்கும் காலம் இளவேனிற் காலம். இளவேனிற் பனியால் நலிந்த மக்கள் பகலவன் ஒளியைக் கண்டு ''ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்'' என்று இன்புற்று ஏத்தும் காலம் இளவேனிற் காலம். ஆகவே இயற்கையோடு இசைந்து வாழ்ந்த பழந் தமிழ் மாந்தர் இன்பநெறி காட்டும் இளவேனில் குறித்துச் சித்திரையைக் கொண்டாடுவது மிகப் பொருத்தமன்ருே!

★

## மாணவரும் விவசாயமும்

— வ.காந்திமதி நாதன் —

எமது ஈழவள நாடு ஓர் விவசாய நாடு. ''ஈழத் துணவும் காழகத்தாக்கமும்'' என முன்னுளில் தமிழ் நாட்டுச் சங்கப் புலவர்களாலும் போற்றப்பட்டு கீழை நாடுகளின் தானியக்களஞ்சியமாகத் திகழ்ந்தது இந்நாடு. ஆனல் அத்தகை நாடு இன்று தனது உணவுப் பொருட் களுக்குப் பிறநாட்டை எதிர் நோக்கிக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. இதனல் காலதாமதமடைவதுடன் தனது பணத்திலும் பெரும் பகுதியை அந்நிய செலவாணியில் வீண் விரயமாக்குகிறது.

உப உணவுப் பொருட்களான மிளகாய், வெங்காயம், உருளைக் கிழங்கு, பருப்பு முதலியன சிறப்பாக விளையக் கூடிய நாடாகவிருந்தும் இவற்றை வெளி நாடுகளிலிருந்து பெற்றுக் கொள்கிறோம் என்றால் எம்முடைய சோம்பேறித் தன்மையன்றி வேறெதுவுமில்லை. போதிய நிலமுண்டு, வளமுண்டு, உட லுழைப்பிற் கேற்ற தொழிலாளர் பலருண்டு. இவையாவுமிருந்தும் வீணுக உணவுக்கும் தொழிலுக்கும் தேடியலைகிறோம். எத்தனை எத்தனையோ தொழிலிருந்தாலும் உத்தியோக மோகத்தில் திரிகிறோம். நம் நாட்டில் பெருமளவில் மலிந்து வளர்ந்திருக்கும் வேலையற்ற கஷ்டங்களுக்குக் காரணம் நம்மவரின் உத்தியோக மோகமெனில் முற்றிலும் உண்மையாகுமேயன்றித் தவருகாது. ஆதலின் வருங்கால சமுதாயமான மாணவர்கள் விவசாயத்தின் மகிமையை உணர்ந்து செயல்படத் துணிய வேண்டும். விவசாயத்தை மேற் கொள்வோர் பிறர்க்குக் கை கட்டிச் சேவகஞ் செய்யத் தேவையில்லை. இத் தொழில் இலாபகரமான தென்பதையும் எம்போன்ற மாணவ சமுதாயங்கள் உணரவேண்டும். இன்று சகல பாடசாலைகளிலும் விவசாயத்தை ஓர் கட்டாய பாடமாக்கும் திட்டமுறை பெரும் பயிற்சியும், ஊக்கமும் அளிப்பதுடன் தரிசு நிலங்களில் சிறப்பாகப் பயிரிடும் முறை, திட்டமிட்ட பயிர்ச் செய்கையால் வரும் என்பவற்றையும், அறிய முடிகிறது. இப்புதிய பாடத்திட்டம் மண்வெட்டி பிடித்த பெற்றோரின் பிள்ளைகள் மண்வெட்டி பிடிக்கவும் சுகம் அனுபவித்துக் கொண்டிருந்த பிள்ளைகள் சுகங்களை அனுபவிக்கவும் விடாது தாம் பிறந்த மண்ணைத் திருத்தி எல்லோரும் விவசாயத்தைப் பயில ஏற்றதோர் நியதியை ஏற்படுத்தியுள்ளது. இப் பழக்கம் இன்று நடைமுறையில் இருப்பதை நாம் காணக் கூடியதாகவுள்ளது.

மாணவர்களின் களை பிடுங்கும் திட்டம், நாற்று நடும்பணி, அருவி வெட்டும் முயற்சி யாவும் இன்று பெரும் வெற்றியை அளித்ததுடன் புகழ் பெற்ற பாராட்டையும் பெற்றுக் கொண்டிருப்பது என்றால் மாணவர்களின் ஊக்கம்தான் என்னே! இந்த ஆண்டு நெல் உற்பத்தியில் 50 லட்சம் புசல் நெல் உள்நாட்டில் உற்பத்தியாகியுள்ளது. இவ்வுற்பத்தியில் மாணவர்களது பங்கு

கூடியதாயிருந்தது என்றால் மாணவர்கள் இன்னும் கூடிய முயற்சியை விவசாயத்தில் செய்வார்கள் என்பது வெளிப் படை. மாணவர்களின் யௌவன பருவம் பெரும் சக்தியும் சுறுசுறுப்பும் வாய்ந்தது. இச் சக்தியை தேசிய தேவை முயற்சிகளில் குறிப்பாக உணவுற்பத்தி முயற்சிகளில் செல வழிக்கச் செய்வது அரசாங்கத்தினது கடமை மட்டுமன்றி மாணவர்களின் பெற்றோர்களது கடமையுமாகும்.

வீட்டில் பெற்றோர்களது ஊக்கத்தினாலும், பாடசாலை யில் பதவி, பட்ட பேதங்கள் காட்டாத ஆசிரியர்களின் ஊக்கத்தினாலும் ஒவ்வொரு மாணவனும் தமது தேச தேவைகளைப் பூர்த்தி செய்ய உழைப்பான், கவலை, கஷ் டங்கள், பசி, பட்டினி அனைத்தும் மாணவர்கள் விவ சாயத்துக்காக உழைத்தால் இந் நாட்டினின்றும் பறந்து விடும் என்பது உறுதி.

★

## முயலின் தந்திரம்

ச. ஹரிதர்ஷன், ஹெந்தலை, வத்தலை.

ஒரு காட்டில் ஓர் முயல் தன் ஐந்து குட்டிகளுடன் வசித்து வந்தது. அக் குட்டிகள் வெள்ளை வெளேரென்று கொழு கொழு என்று கொழுத்திருந்தன. ஒவ்வொரு நாளும் கவலையின்றிக் காட்டில் திரிந்தன.

இவைகளின் சுதந்திர வாழ்விற்கு குள்ள நரியால் தடை ஏற்பட்டது. அக் குள்ள நரிக்கு இரண்டு சாம்பல் நிறக் குட்டிகள் இருந்தன. முயற் குட்டிகளைக் கண்ட நரிக்கு நாக்கில் ஜலம் கொட்டியது. பசி ஏற்பட்ட நேரங்களில் இரண்டு முயற் குட்டிகளைத் தின்றுவிட்டது. இதை அறிந்த முயல் குட்டிகளைப் பொந்திற்குள் ஒளித்து வைத்தது. குள்ள நரியைத் தீர்த்துக் கட்ட வேண்டு மென்று ஆலோசனை செய்தபடியே காலத்தைக் கழித்தது.

ஒரு நாள் முயல் ஆகாயத்தைப் பார்த்த வண்ணம் நரி செல்லும் வழியில் இருந்தது. அதைக் கண்ட நரி

''முயல் அக்கா ஆகாயத்தை ஏன் பார்க்கிறீர்கள்?'' என்று வினவியது. ''நரி தங்காய் சிங்க மகாராஜன் என் மூன்று குட்டிகளையும் தன் அரண்மனையில் விருந்திற்கு அழைத்துள்ளார். அவர்களைக் கூட்டிச் செல்ல கழு கண்ணு வருவதாகக் கூறினர். அதனுல் தான் ஆகாயத்தைப் பார்க்கிறேன்'' என்றது. தன் குட்டிகளும் அங்கு செல்ல வழி கூறும்படி நரி கேட்டது. அங்கு போக வேண்டுமென்றுல் வெள்ளை நிறமாக மாற வேண்டும் என்றது. வெள்ளை நிறமாக மாற நரி வழி கேட்க முயல் ''தங்காய் அண்டா நிறையச் சுண்ணும்பைக் கரைத்து உன் குட்டிகளையும் போட்டு நீயும் அதற்குள் குதித்து வெளியேறு அப்பொழுது உடல் பூராவும் வெளுத்து விடும் என்றது.'' இவை எல்லாவற்றையும் நம்பிய முட்டாள் நரி தன் குட்டிகளுடன் தானும் சுண்ணும்பு அண்டாவிற்குள் குதித்தது. முயல் மூடியை அடைத்தது. மூன்றும் வெந்து இறந்தன. முயல் தன் பொந்தையடைந்து குட்டிகளிடம் ''கொடியவனைக் கொடியோடு அழித்து விட்டேன். வெளியே வாருங்கள் மறுபடியும் கவலையின்றிச் சுதந்திரமாக வாழ்வோம்'' என்றது. முயற் குட்டிகள் வெளியே வந்து துள்ளித் திரிந்தன.

★

## "எங்கே சமத்துவம் இல்லையோ அங்கே ஜனநாயகம் இருக்க முடியாது" இக் கூற்று உண்மையா?

சி. கணபதிப்பிள்ளை
மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

சமத்துவம் என்ற பதத்திற்கு இங்கிலாந்தில் ஸ்ருவெட் காலப் பகுதியில் ஆட்சி செய்த ஒலிவர் குரேம்வெல் ஒரு வரைவிலக்கணம் கொடுத்திருக்கிருர். ''இந்த நாட்டிலே செல்வன் தன் உயிரைப் பேணி வாழ்வதற்கு எவ்வளவு உரிமையுடையவனுகவிருக்கிருனே அவ்வளவு உரிமை மிக்க வறிய ஒருவனும் உடையவனுகவிருக்கிருன்.'' ஆகவே இதன் மூலம் ஒருவன் தான் பெறும் சலுகைகளையும் உரிமைகளையும் மற்றவனுக்குத் தீமையளியா விதத்தில்

அனுபவிக்க முடியும். ஆனால் அரசியல், பொருளாதார சமுதாய விடயங்களில் தனி மனிதன் உரிமை கவனிக்கப்படுவதால் அங்கே ஜனநாயகத்திற்கு இடமேற்படுகிறது. அன்றி தனி மனித சுதந்திரம் தடைப்படுமானால் அரசியல், பொருளாதார விடயங்களில் சமத்துவத்தைக் காண முடியாது. நீதி சம்பந்தமான விடயங்களிலும் சமத்துவம் இல்லையானால் அங்கு சர்வாதிகார நிலையேற்படுமன்றி ஜனநாயகம் நிலவ முடியாது.

ஜனநாயக முறையில் இயங்கும் தாபனங்கள் இருக்கும் நாட்டிலேதான் மக்கள் சமத்துவமாக வாழுகிறார்கள். இனம், குலம் ஆகிய ஏற்றத் தாழ்வுகள் இருந்தாலும் கூட அங்கு சமத்துவம் காணப்படுகிறது. உதாரணமாக ஜனநாயகம் வளர்ந்துள்ள இங்கிலாந்தை நோக்கும் பொழுது அங்கே அரசியலில் சமத்துவம் காணப்படுகிறது, ''மக்களினால் மக்களுக்காக, மக்களின் ஆட்சி நிலவுவதனால் இந் நாட்டில் அரசியலில் சமத்துவம் காணப்படுகிறது. வாக்களிக்கும் விடயத்தில் அதற்குரிய தகைமைகளை நிறைவேற்றிய ஆண், பெண் இருபாலாரும் வாக்களிக்க உரிமையுண்டு, ஆனால் ஆண் பெண் என்ற பாகுபாடு காட்டிவிடாது அரசியலில் பங்கு பற்ற உரிமை ஏற்படுகிறது. வாக்காளர் தமக்கு விரும்பிய கட்சியை ஆதரிக்கலாம். அதற்குத் தடைகள் விதிக்கப்படவில்லை. அது மட்டுமன்றி ஒருவன் மக்கள் பிரதிநிதியாகவும் வரச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் சபையில் அரசாங்கத்தைக் கண்டிக்கவும், தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவும் இடமளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இங்கே படித்தவர் படியாதவர் என்ற பாகுபாடின்றிக் குறிப்பிட்ட தகைமைகளை உடையோருக்கு அரசியலில் பங்கு பற்ற உரிமை யளிக்கப் பட்டுள்ளது. ஆனால் ருஷ்யாவை நோக்கும் போது அங்கே அரசியல் உரிமைகள் மறுக்கப் பட்டுள்ளன. பெயரளவில் மட்டும் மக்கள் குறிப்பிட்ட கட்சிக்குத் தம் வாக்குகளை அளித்து அரசாங்கத்தை அமைப்பர். ஆகவே இங்குள்ள மக்கள் அரசியலில் பங்கு பற்றும் உரிமைகளைப் பெறாது இருக்கின்றனர். இதனால் அங்கு சர்வாதிகார ஆட்சி நடைபெறுகின்றதன்றி மக்களின் ஆட்சி நடைபெறவில்லை. ஆகவே சுருங்கக் கூறின் அரசியல் உரிமைகளை அனுபவிப்பதில் எங்கே சமத்துவம் இல்லையோ அங்கே ஜனநாயகத்தைக் காண முடியாது.

மேலும் ஜனநாயக நாடுகளில் ஜனநாயகத்தை வளர்க்கும் தாபனங்கள் அமைந்துள்ளன. தலத் தாபனங்கள், சங்கங்கள் போன்றவைகளில் மதம், சாதி, கலாச்சாரம், பண்பாடு போன்ற வித்தியாசங்களைக் கவனியாது மக்கள் அதில் பங்கு பற்றுகின்றனர். இங்கே தம் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனர். தலத் தாபன விடயங்களிலும் சங்கத்தின் நடவடிக்கைகளிலும் பங்கு பற்றுகின்றனர். இதனால் காரியங்களைச் செய்து முடிப்பதில் அவர்

களிடையே சச்சரவுகள் ஏற்படுகின்றன. அப்படியிருந்த போதிலும் அவர்களிடையே விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் வளர்கின்றது. ஆகவே ஜனநாயகத் தாபனங்களிலே பங்கு பற்றுவதில் சமத்துவம் காணப் படுகிறது. அது மட்டுமன்றி சங்கங்களில் சேரவும் விலகவும் உரிமையிருப்பதால் ஜனநாயகம் எனப் படுகின்றது. இதனுல் ஜனநாயகத்தின் தன்மைகள் வளருகின்றன. ஆனுல் மக்களிடையே சமத்துவம் இல்லாவிடில் ஜனநாயகத்தை அங்கு எதிர் பார்க்க முடியாது.

அடுத்ததாக பொருளாதாரத்திலும் சமத்துவம் இருக்க வேண்டும். எவனும் தன் விருப்பப்படி மற்றவனுக்கு இடையூறு அளியா வண்ணம் எத் தொழிலையும் செய்யலாம். தன் இயல்புக் கேற்ப பொருளாதாரத்தை விருத்தி செய்யுமளவிற்குச் சுதந்திரம் உண்டு. பொருளாதாரத்தில் சமத்துவம் இல்லாவிடில் தனி மனிதனின் உரிமை மறுக்கப்படும். ஆனுல் செல்வத்தைப் பெருக்கும் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் சமத்துவம் இல்லாவிடில் முதலாளி தொழிலாளிக்கு கொடுமைகள் விளைவிப்பான். தொழிலாளி அரசியலில் சமத்துவம் பெற்றிருந்தும் பொருளாதாரச் சமத்துவம் இல்லாவிடில் அரசியற் சமத்துவத்தாற் பிரயோசனமில்லை. ஆகவே பொருளாதாரத்திற் சமத்துவம் இருப்பதால் முதலாளியைப் பாதிக்காத விதத்தில் தொழிலாளி தன் செல்வத்தைப் பாதுகாத்து வளர்க்க முடியும். ஆகவே இங்கே தனிமனித சுதந்திரம் பாதுகாக்கப் படுகிறது. ஆனுல் ரூஷ்யாவில் பொருளாதார சமத்துவம் இருக்கிறது. ஆனுல் அங்கு ஜனநாயகம் நிலவுகிறதென்று கொள்ள முடியாது. ஏனெனில் அங்கு தனிமனித சுதந்திரம் மறுக்கப்படுகிறது. அது மட்டுமன்றி பொருளாதாரத்தில் சமத்துவம் இருந்தால் மட்டும் போதாது. சுதந்திரமும் வேண்டும். அப்படியானுற்றுன் ஜனநாயகமும் அங்கு நிலவ முடியும். ரூஷ்யா போன்ற சர்வாதிகார நாடுகளிலே ஒருவன் தன் திறமையையும் ஆற்றலையும் அபிவிருத்தி செய்து சமுதாயத்தில் முன்னுக்கு வர அவனுக்கு உரிமையுண்டு. ஆகவே பொருளாதார சமத்துவம் மட்டும் இருந்தால் அங்கு ஜனநாயகத்திற்கு இடமுண்டு என நம்ப முடியாது. ஆனுல் பொருளாதார சமத்துவத்துடன் பொருளாதார சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும். அப்படியானுற்றுன் அங்கு ஜனநாயகத்தைக் காண முடியும்.

தனி மனிதன் சமுதாயத்தில் வாழும் உரிமை பெற்றுள்ளான். அது மட்டுமன்றி தான் விரும்பிய வண்ணம் எதையும் செய்ய முடியும். அப்படியிருந்தும் அவன் சமுதாயத்தில் சமத்துவமுடையவனுகவே கணிக்கப் பட்டுள்ளான். இம்மனிதன் நீதியைப் பெறும் விடயத்தில் சமமாகவே கருதப் படுகிறுன். நாட்டில் மதிப்புள்ளவரானுலும் சரி, அரசாங்க உத்தியோகத்தரானுலும் சரி, நாட்டையாளும் பிரதமரானுலும் சரி நீதிமன்றத்தில் சாதாரண

பிரஜையாகவே கணிக்கப்படுகிறார். ஜனநாயக நாடான இங்கிலாந்தில் மட்டுமன்றி ஐக்கிய அமெரிக்காவில் நீதித் துறை சுதந்திரத்துடன் இருந்து நீதியை வழங்குகிறது. ஆகவே நீதி மன்றத்தை எந்த ஏழையும் அணுகி நீதியைக் கேட்கலாம். ஆனால் பிரான்சு நாட்டில் அரசாங்க உத்தியோகத்தர் போன்றோர் சாதாரண நீதி மன்றங்களில் அழைக்கப்பட்டு விசாரிக்கப் படுவதில்லை. ஆனால் அதற்கென நீதி மன்றங்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஆகவே இங்கு நீதியில் சமத்துவம் காணப்படவில்லை. ஜனநாயகத்திற்றான் சகல பிரஜைகளும் சமமாகக் கணிக்கப் படுகின்றனர். ஆதலினாற்றான் ஜனநாயகம் அங்கு வளருகிறது.

ஆகவே சமுதாயம், அரசியல், பொருளாதாரம் ஆகியவைகளில் சமத்துவம் இருக்க வேண்டும். வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வுகள் இருந்தும் கூட சாதி, குலம், வருணம் ஆகிய பாகுபாடுகள் கவனிக்கப்படாது சமத்துவம் ஜனநாயக நாடுகளிற் கொடுக்கப்படுகிறது. சர்வாதிகார நாடுகளிற் சிலவற்றிலும் சமத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆனால் சமத்துவம் இருந்தால் மட்டும் ஜனநாயகம் இருக்க முடியாது. ஆனால் சமுதாய, அரசியல். பொருளாதார விடயங்களில் சமத்துவம் இருப்பதுடன் சுதந்திரமும் வேண்டும். ஆகவே சுருங்கக் கூறின் எவனும் பாகு பாடின்றி உரிமைகளை அனுபவிப்பதில் சமத்துவம் பெற வேண்டும். அவற்றுடன் சுதந்திரமும் இருக்க வேண்டும். அங்கு தான் உண்மையான ஜனநாயகத்தைக் காணலாம்.

எந்த ஒரு நாடும் அரசியல் சுதந்திரத்தை மட்டும் பெற்றுவிட்டால் உண்மையான சுதந்திர நாடாக மாட்டா. பொருளாதாரச் சுதந்திரமும், அரசியற் சுதந்திரமும் ஒருங்கே பெற்ற நாடே உண்மையான சுதந்திர நாடாகும். சில சந்தர்ப்பங்களில் பெரும்பான்மையினரிடம் அரசியலதிகாரம் என்னும் ஆயுதம் தானாகவே சென்று விடுகிறன்து. இதனால் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை நசுக்கி ஆளப் பார்ப்பார்கள்.

# மாணவர் மன்றம்

## அன்புள்ள மருமக்களே!

நீங்கள் மாணவர் மன்றத்தில் அங்கத்தவர்களாகச் சேர்வதுடன் உங்களுக்கு அறிமுகமானவர்களையும் அங்கத்தவர்களாகச் சேர்க்கவும். —மணிமாமா

23. லலிதா இரத்தினம், குரும்பசிட்டி, தெல்லிப்பழை.
24. கே. சாமுவேல், பட்டித்திடல், தோப்பூர்.




## என்றும் கவலை

— இ. இராசரத்தினம் —

1. எண்ணச் சுழலிற் சிக்குவதால்
என்றும் கவலை உண்டாகும்
மண்ணில் வாழும் மாந்தரெல்லாம்
மனத்திற் கவலை வளர்க்கின்றார்.

2. துள்ளித் திரியும் மான்களெல்லாம்
உள்ளக் கவலை கொள்வதில்லை
கள்ளம் இல்லா அவை மனதில்
எண்ணக் குவியற் கிடமில்லை.

3. பறந்து திரியும் பறவைகளும்
மறந்தும் கவலை கொள்வதில்லை
உறங்கும் மனதில் உலகத்து
உணர்ச்சி அலைகட் கிடமில்லை.

4. மண்ணில் வளரும் மரங்களுமே
மனத்திற் கவலை வளர்ப்பதில்லை
எண்ணச் சுழலுக் கிடமில்லை
என்றும் கவலை அவைக்கில்லை.

5. உண்ணும் போதும் எண்ணுகிறான்
உறங்கும் போதும் எண்ணுகிறான்
மண்ணிற் பிறந்த நாள்முதலாய்
எண்ணக் கடலில் நீந்துகிறான்.

6. மனத்திற் கவலை வளர்க்கிறான்
மாறாத் துயரில் விழுகின்றான்
மண்ணில் மடியும் நாள்வரையும்
மனத்திற் கவலை மறையாது.

## எதிர் காலப் பிரசைகளே !

— எஸெஸெஸ் —

1. எதிர்காலப் பிரசைகளே இவ்வுரையைக் கேட்டிடுவீர்
புதிரான இவ்வுலகைப் புரிந்து கொள்ள முயன்றிடுவீர்
கதிரொளியாம் பகலவனைக் காண்கின்றீர் நாள் தொறும்
கதிர்வீசி ஒளிவிளக்காய் கருத்துடனே வாழ்ந்திடுவீர்

2. எல்லையற்ற அறிவுண்டு; எதிர்கால வாழ்வுண்டு;
எதிர்த்து நின்று சாடிடுவீர் எங்களின் விரோதிகளை
தொல்லையின்றி வாழ்ந்திடுவீர் முல்லை மணம் வீசுதற்கு
எதிர் நின்று வென்றிடுவீர் இனத்துவேசத் துரோகிகளை

3. பள்ளிக்குச் சென்றிடுவீர்; பாடங்கள் படித்திடுவீர்;
எள்ளிநகை யாடாமல் எளிமையுடன் வாழ்ந்திடுவீர்
அஞ்ஞானம் அகற்றிடுவீர்; விஞ்ஞானம் ஆய்ந்திடுவீர்
பின்னோர்கள் நகையாமல் முன்னேறச் செயல் புரிவீர்.

★

## — பூனைக்குட்டி —

பொத்துவில் கவிவாணன்

நண்பா எங்கள் வீட்டினி லோர்
நல்ல பூனை இருக்கிறது
அன்பாய் பழகும் அப்பூனை
அதுவும் கத்தும் 'மியாவ்'(வெ) என்று

இரவு வேளை தூங்காது
என்றும் வீட்டை வலம்வந்து
குரலைக் கூடக் காட்டாது
குதித்து எலியைப் பிடிக்குமது

எலியைக் கண்டால் இருட்டினிலே
இரைச்ச லின்றிப் பதுங்கிப்போய்
புலியைப் போல அதன்மீது
'பொத்' தென்றுடனே பாயுமது!

பாலும் அதற்குக் கொடுத்திடுவேன்
பக்கத்தில் நான் இருத்திடுவேன்
நாளும் என்னைத் தொடர்ந்து வரும்
நல்ல பூனைக் குட்டியது.

# பசுவும் கயிறும்

இ. என். ராசா, கிளிநொச்சி

அது ஒரு பெரிய தோட்டம். அங்கே ஒரு பசு அங்குமிங்கும் உலாவி மேய்கிறது. பெருமரம் ஒன்றில் நீளமான கயிற்றில் அது கட்டப்பட்டிருக்கிறது. அதிகாலையில் இடத்தை விட்டு அகலாமல் மேய மனமின்றிப் படுத்திருந்த பசு மத்தியானத்திற்கும் காலைக்கும் இடைப்பட்ட நேரத்தில் எழுந்து மேய ஆரம்பிக்கிறது. மத்தியான வெய்யில் உடம்பில் சுட்டதும் திரும்பி வந்து அந்த மரத்தடியில் படுத்துக் கொள்கிறது. அதன் பிறகு மேய்வதற்கு அதிக விருப்பம் ஏற்படவில்லை என்றாலும் எழுந்து போய் கொஞ்சமாவது மேயத்தான் செய்கிறது. மாலையானவுடன் வந்து படுத்துக் கொள்கிறது. பிறகு மேயவில்லை.

உலகம் யாவையும் தாமுளவாக்கலும் நிலை பெறுத்தலும் நீக்கலும் செய்கின்ற அந்த ஆண்டவனாகிய பெருமரத்தில் மனம் என்னும் கயிற்றினால் பசு என்னும் நம் ஆன்மா கட்டப்பட வேண்டும்.

காலையில் மனமின்றிப் பசு படுத்திருப்பது போல் குழந்தையில் இருந்து பராயம் தெரியும் வரையும் மேய்ச்சலாகிய உலக விவகாரங்களில் ஈடுபடாமல் இருக்கும் நாம் இடைப்பட்ட நேரமாகிய வாலிப வயதில் உலக விவகாரங்களில் மனதைச் செலுத்துகிறோம்.

மத்தியானமாகிய நடுப் பருவத்தை அடையும் போது சலிப்பு ஏற்பட்டு லௌகீக ஆசைகளைக் குறைத்துக் கொள்கிறோம். அதன் பிறகு பசு மனமின்றி மேய்வதைப் போல் நாமும் வாழ்க்கைச் சுவையின்றி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

மாலை என்ற வயது முதிர்ந்தவுடன் பசு பெரு மரத்தடியை நோக்கிப் போவதுபோல் நாமும் இறைவனாகிய பரம்பொருளை நாடுகிறோம்.

தோட்டமாகிய உலகத்தில் வாழ்கின்ற நாம் மனம் என்னும் கயிற்றால் கட்டப் பட்டவர்களாக இருக்க வேண்டும்.

பாரதியாரும் ''தெய்வம் நமக்குத் துணை பாப்பா ஒரு தீங்கும் வரமாட்டாது பாப்பா'' என்று பாடினர். பெருமரத்தைச் சார்ந்த பல்லிக்கும் அச்சமில்லை என்பது பழமொழி.

எனவே நாம் மனக் கயிற்றை இறைவனென பெரு மரத்திற் கட்டிவிட வேண்டும்.

மனக் கயிறு அறுந்து போகுமேயானல் நம் வாழ்க்கை கட்டறுத்த பசுவைப் போல் திசை தெரியாமற் சென்று அலைந்தொழிந் தலைவதைத் தவிர வேறு வழியேயில்லை.

மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வதுபோல் பெரும் பூசை வைத்து, அமுது படைத்து இறைவனை வணங்கு வதோடு நில்லாமல் இறைவனை நினைக்கின்றபோது உடம் பெல்லாம் நாணி மயிர் சிலிர்த்து கண்களில் நீர் ததும்பி கைகள் உயர்ந்து கூப்பி அவர் பாதங்களை விடாதபடிக்கு நம் அன்பு அமைய வேண்டும். ''கடவுளை நம்பினேர் கை விடப்படார் என்பதற்கிணங்க எல்லாம் வல்ல இறைவனின் மேல் அன்பைச் செலுத்தி இத்தொல்லுலகத் துன்பங்களை நீக்குவோமாக!


**வாய்வு சூரணம்**

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண பித்த வாய்வுகள், கை கால் இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு-வயிற்று வலிக்குச் சிறந்தது.
(பத்தியமில்லை)

150 கிராம் டின் ரூபா. 4-00

(தேவைக்கு எழுதவும்)

**வீரகேசரி மாத்திரை**

ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும் உறுப்புக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்.

100 பில்ஸ் ரூ. 25; 50—ரூ. 13, 24—ரூ. 7. (மெழுகு ரூ. 4)

(பார்சல் சார்சு தனி)

**பண்டிட்: S. V. R. கண்டர் சன்ஸ் R. I. M. P.**
அரிசிப்பாளையம், சேலம் - 9. (S. I.)

கிடைக்குமிடங்கள்:-
(1) ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, சிலோன் (2) அமிர்தலால் அன் கோ. (மெடிக்கல் ஸ்ரோர்ஸ்) 146, நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை- 3. (3) ராஜா மெடிக்கல், 31, தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர் கண்ட். (4) வல்லராம் 188 A, தாராவி ரோடு, பம்பாய்-17.

# பேனா நண்பர் சங்கம்

8. கே. சாமுவேல்
பட்டித்திடல்,
தோப்பூர்.

தமிழுடன், ஆங்கிலமும் சிங்களமும் ஓரளவு தெரிந்தவர். இவரின் பொழுது போக்குகள் கதைப் புத்தகங்கள், பத்திரிகைகள் வாசித்தல், வானொலி கேட்டல், இயற்கைப் படங்கள் சேகரித்தல் ஆகியவையாம். ஆண் பெண் இருபாலாரும் எழுதலாம்.

9. மு. க. சுப்பிரமணியம்
தலைமையாசிரியர்
குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.

தமிழ், ஆங்கிலம் தெரிந்தவர். முத்திரை சேகரித்தல் இவரின் பிரதான பொழுதுபோக்காகும். இலங்கை முத்திரைகள் உட்பட பிறதேச முத்திரைகள் மாற்ற, விலைக்கு வாங்க விரும்புவோர் இவருடன் தொடர்பு கொள்ளலாம்,

## அறிவுப்போட்டி 3ல் பரிசுபெற்றோர் விபரம்

முதற் பரிசு ரூபா 15-00. மூன்று பிழையுள்ள விடையனுப்பிய மூவர் ரூபா 5-00 வீதம் முதற்பரிசு பெறுகின்றனர்:

1. க. ஆனந்தன், மத்திய மகா வித்தியாலயம், வயாவிளான்.
2. பொ. நற்குணராசா, மல்லாகம் இந்துக்கல்லூரி, மல்லாகம்.
3. பொ. அமிர்தராசா, தபாற்கந்தோர், முள்ளியவளை.

இரண்டாவது பரிசு ரூபா 10-00. நான்கு பிழையுள்ள விடையனுப்பிய நால்வர் ரூபா 2-50 வீதம் இரண்டாம் பரிசு பெறுகின்றனர்:

1. மா. குகமூர்த்தி, c/o வே. பூவிலிங்கம், நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.
2. பொ. சரோசினிதேவி, முள்ளியவளை.
3. எம். ஏ. அசீஸ், அறிவகம், பொத்துவில்.
4. க. சந்தியா பத்திராஜா, கோட்றேட், மல்லாகம்.

**பரிசுபெற்ற நேயர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.**




த. சரஸ்வதிதேவி
வித்தியானந்தக் கல்லூரி,
முள்ளியவளை.

பல்லாயிரக் கணக்கான மாண வர்கள் மத்தியிலே அரியமணி போல விளங்கும் சிறுவர் மாத இதழான வெற்றிமணி வீரமணி யாக ஒலிப்பதைக் கண்டு மகிழ்ச்சி யடைகின்றேன். பிரதானமாக மேல் வகுப்பு மாணவர்களுக் கேற்ற கணக்கியல், புவியியல் இலக்கியம் ஆகியன வெளிவரு வது மெச்சத்தக்கது.

அ. அருளேஸ்வரி
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

சிறுவர்கள் மத்தியில் வெற்றி மணி வீர நடை போடுவது கண்டு மகிழ்கின்றேன். பாடசாலை மாண வர்கள் அகராதியை உபயோகித் துப் பழக அரிய சந்தர்ப்பம் அறி வுப் போட்டிமூலம் ஆக்கியுள்ளீர் கள். வெற்றிமணியில் வரும் கட் டுரைப் போட்டி அறிவுப்போட்டி ஆகியவற்றில் மாணவர்கள் பங்கு பற்றினால் நிச்சயம் அறிவுவளரும் என்பதில் ஐயமில்லை.

★★

## அறிவுப்போட்டி இல. 3 இன் சரியான விடை

இடமிருந்து வலம் :

1. பருப்பு 5. புடைமண் 7. சவள் 9. இருள் 10. தாரா 12. மதுகந்தம

மேலிருந்து கீழ் :

1. பரிசம் 2. ப்புள்இராக (இராகப்புள்) 3. புடை 4. கண்டி 6. மகள் 10. தாது 11. உம்

# ஈழத்துச் சிறுகதை நூல்கள்.

32 ஈழத்துச் சிறுகதை நூல்களின் பெயர்கள் இங்கே தரப்படுகின்றன. பல எழுத்தாளர்களின் கதைகளைத் தொகுத்து வெளியிட்ட தொகுப்பு கதை நூல்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. எமக்கு எழுதினுல் விலைவிபரம், கிடைக்குமிடம் ஆகியவற்றை அறிவிக்கமுடியும்.

| | நூலின் பெயர்: | எழுதியவர் பெயர்: |
|---|---|---|
| 1. | அக்கா | அ. முத்துலிங்கம் |
| 2. | ஒரே இனம் | செ. கணேசலிங்கம் |
| 3. | சங்கமம் | செ. கணேசலிங்கம் |
| 4. | நல்லவன் | செ. கணேசலிங்கம் |
| 5. | நிலவும் நினைவும் | சிற்பி |
| 6. | கயமை மயக்கம் | வரதர் |
| 7. | கடவுளரும் மனிதரும் | பவானி |
| 8. | கன்னிப்பெண் | நகுலன் |
| 9. | குழந்தை ஒரு தெய்வம் | காவலூர் இராசதுரை |
| 10. | சாலையின் திருப்பம் | டொமினிக் ஜீவா |
| 11. | பாதுகை | டொமினிக் ஜீவா |
| 12. | தண்ணீரும் கண்ணீரும் | டொமினிக் ஜீவா |
| 13. | தோணி | வ. அ. இராசரத்தினம் |
| 14. | டானியல் கதைகள் | கே டானியெல் |
| 15. | தாம்பூல இராணி | அருள் செல்வநாயகம் |
| 16. | தாலி சிரித்தது | மலையமான் |
| 17. | தெய்வமகன் | நாவேந்தன் |
| 18. | வாழ்வு | நாவேந்தன் |
| 19. | நிறை நிலா | இ. நாகராஜன் |
| 20. | நிலவிலே பேசுவோம் | என். கே. ரகுநாதன் |
| 21. | பசி | மாதகல் செல்வா |
| 22. | புதுயுகம் பிறந்தது | மு. தளையசிங்கம் |
| 23. | மாலா நீ என்னை மறந்துவிடு | சீ. சிவஞானசுந்தரம் |
| 24. | மேடும் பள்ளமும் | நீர்வை பொன்னையன் |
| 25. | வீ | எஸ். பொன்னுத்துரை |
| 26. | வெண்சங்கு | இரசிகமணி கனக. செந்திநாதன் |
| 27. | வெள்ளரி வண்டி | பொ. சண்முகநாதன் |
| 28. | ஊர் நம்புமா | நந்தி |
| 29. | அமைதியின் இறகுகள் | செம்பியன் செல்வன் |
| 30. | யாழ்ப்பாணக் கதைகள் | கே. வி. நடராசன் |
| 31. | யோகநாதன் கதைகள் | யோகநாதன் |
| 32. | மோதல் | திமிலை மகாலிங்கம் |

# கட்டுரைப் போட்டி

## நான் விரும்பும் ஈழத்துச் சிறுகதை நூல்

**மாணவர் மன்ற அங்கத்தவர்களுக்கு**

முதற் பரிசு ரூபா 25-00

இரண்டாவது பரிசு ரூபா 10-00 புத்தகப் பரிசு

**மாணவர் மன்ற**

**அங்கத்தவர்கள் அல்லாதவர்களுக்கு**

ஒரு பரிசு ரூபா 15-00 புத்தகப் பரிசு

இந்த இதழில் ஈழத்துச் சிறுகதை நூல்களின் அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. இவற்றைத் தேடி வாசித்து உங்களுக்குப் பிடித்த ஒரு சிறு கதை நூல்பற்றி

**"நான் விரும்பும் ஈழத்துச் சிறு கதை நூல்"**

என்ற தலைப்பில் விமர்சன ரீதியாக புல்ஸ்காப் கடதாசியில் 4 பக்கங்களுக்கு மேற்படாது எழுதி **15-10-68**க்கு முன் வெற்றிமணியில் வெளியிடப்படும் கட்டுரைப் போட்டிக் கூப்பனையும் இணைத்து

கட்டுரைப் போட்டி, வெற்றிமணி, முள்ளியவளை

என்ற முகவரிக்கு அனுப்புக.

**சிறந்த கட்டுரை மூன்றுக்கு பரிசு கொடுக்கப்படும்.**

பரிசுக் கட்டுரைகள் வெற்றிமணியில் வெளியிடப்படும்.

---

## கட்டுரைப் போட்டி

பெயர்: .............................. வயது: ..........

முகவரி: ..............................

..............................

அங்கத்தவர் இல: ..............................

சிறு கதை நூலின் பெயர்: ..............................

..............................

கையொப்பம்


*Telegrams :* **VASAOPTICO** *Telephone :* **2931**

# MOHANLAL. C. VASA

No. 207, Second Cross Street,
**COLOMBO. 11.**

## OPTICIAN C. M. VASA

*For all your Optical Requirements.*



## MOHANLAL C. VASA
**QUALIFIED OPTICIAN.**

---

கண்களுக்குத் தேவையான

**சகலவிதமான கண்ணாடிகளுக்கும்**

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

## மோகன்லால் C. வாசா

இல. 207, இரண்டாங்குறுக்குத் தெரு,
கொழும்பு. 11.

தொலைபேசி: 2931

இப்பத்திரிகை சக்தி அச்சகத்தினருக்காக, பொ. இராசரத்தினம் அவர்களால் முள்ளியவளை தண்ணீரூற்றிலுள்ள சக்தி அச்சகத்தில் 15-7-68 திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.